**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.61/2012**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 07 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வராஜ் | மதம் | : இந்து |
| த/பெ | : கண்ணன் (எ) கிருஷ்ணன் | ஜாதி | : -- |
| வயது | : 71 | கிராமம் | : நகரி |
| தொழில் : | பணி ஓய்வு | வட்டம் | : நகரி |

**07.10.2025**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 2ம் வாதி யார் என்றால் என் தம்பி ஆவார். என் அப்பா பெயர் கண்ணன் (எ) கிருஷ்ணன் ஆகும். அம்மா பெயர் ராஜம்மாள் ஆகும். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 6 நபர்கள் ஆவார்கள். 1. ஜெயராஜ், 2. சந்திரா, 3. கஸ்தூரி, 4. செல்வராஜ், 5. ஜான், 6. சிகாமணி ஆவோம். ஜெயராஜ் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. 1990ல் இறந்துவிட்டார். ஜெயராஜ் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஜெயராஜுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பிள்ளைகள். ஜெயராஜ் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சிகாமணி உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. 2012ல் இறந்துவிட்டார். சிகாமணியின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. சந்திரா உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. 2022ல் இறந்துவிட்டார். சந்திராவின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கஸ்தூரி உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அம்மாவின் கைரேகை இல்லை என்பதால் சொத்தை மீண்டும் என்னிடம் ஒப்படைக்க கேட்டு தாக்கல் செய்துள்ளேன். சொத்து எங்கு உள்ளது என்றால் தரணிவராகபுரத்தில் உள்ளது. அது எத்தனை ஏக்கர் என்றால் 50 செண்ட் ஆகும். ஆதியில் சொத்து யாருக்கு பாத்தியம்

என்றால் என் அம்மா ராஜம்மாள் என்பவர் தயாளன் என்பவரிடமிருந்து 16.11.1976ல் வாங்கியுள்ளார். தயாளன் பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல் இருந்தது என்றால் சரிதான். அதன்பின்பு பட்டா, சிட்டா, அடங்கல் என் அம்மா பெயருக்கு வந்தது என்றால் சரிதான். என் அம்மா 7ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் இல்லை. என் அம்மா கையெழுத்து செய்வாரா கைரேகை வைப்பாரா என்றால் கைரேகை வைப்பார். என் அப்பா தமிழ், தெலுங்கு, இந்தி எதில் கையெழுத்து செய்வார் என்றால் தமிழில் கையெழுத்து செய்வார். கஸ்தூரி எந்த மொழியில் கையெழுத்து செய்வார் என்றால் தமிழில் கையெழுத்து செய்வார்.

3. தயாளனிடம் என் அம்மா சுயமாக சம்பாதித்து வாங்கினார் என்றால் நாங்களும் சம்பாதித்து பணம் கொடுத்தோம். என் அம்மாவிடம் எந்த பணமும் இல்லை. 1976ல் எனக்கு என்ன வயது என்றால் 1954ல் நான் பிறந்தேன். நான் 1954ல் பிறந்தேன் என்பதை காட்ட பிறப்பு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் PUC படித்து ரயில்வேயில் அலுவலக மேற்பார்வையாளராக (Office Superintendent) பணி புரிந்தேன். நான் எந்த வருடம் பணிக்கு சென்றேன் என்றால் 1973ல் ஜுன் மாதம் PUC முடித்தேன். 21.07.1973ல் பணிக்கு சேர்ந்துவிட்டேன். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் கேட்கவில்லை எனவே தாக்கல் செய்யவில்லை.

4. என் அப்பா என்ன வேலை செய்தார் என்றால் கேங் மேட் ஆக இருந்தார். என் அப்பா உயிருடன் உள்ளாரா என்றால் 2000ல் இறந்துவிட்டார். என் அப்பா வேலையில் இருந்தார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் வேறு வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து ராஜம்மாள் சுயமாக சம்பாதித்த சொத்து என்றாலும் நாங்கள் சம்பாதித்து வாங்கியிருந்தால் எங்கள் பெயரில் சம்பாதித்து வாங்கியிருப்போம் என்றாலும் சரியல்ல. என் அம்மா சுயமாக கிரையம் வாங்கியதால்தான் 7ம் பிரதிவாதிக்கு சுயமாக கிரையம் கொடுத்துள்ளார் என்றால் தவறு. சொத்தில் எனக்கோ, என் அப்பாவிற்கோ, என் உடன் பிறந்தவருக்கோ எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. பட்டா, சிட்டா, அடங்கல் 7ம் பிரதிவாதி ஜெயசந்திரன் பெயரில் தற்போது மாறியுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

5. என் அம்மா எந்த வருடம் கிரையம் கொடுத்தார் என்றால் 2000

வருடமாகும். நான் இந்த வழக்கை எந்த வருடம் தாக்கல் செய்தேன் என்றால் 2012 ஆகும். நான் 12 வருடம் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். என் அப்பா, அம்மா உயிருடன் இருந்த வரையில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு காலவறையரையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் 12.04.2012ல் என் அக்கா கஸ்தூரி முள் செடி வெட்ட சென்ற போது அவர்கள் வந்து தாங்கள் கிரையம் வாங்கிய இடம் என தகராறு செய்தார்கள். கஸ்தூரியுடன் வேலை செய்யும் மாரியம்மாள் என்பவர் தான் எங்கள் அம்மா போல் கைரேகை வைத்ததாக சொன்னார். அதை நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளார்.

6. கஸ்தூரியும் என் அப்பாவும் தமிழில் கையெழுத்து செய்வார்கள் என்றால் ஆமாம். என் அம்மா கைரேகை வைப்பார் என்றால் ஆமாம். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் 2012ல் வழக்கு சொத்தின் மதிப்பு உயர்ந்ததால் நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மாரியம்மாள் உயிருடன் உள்ளாரா என்றால் இறந்துவிட்டார். எந்த வருடம் இறந்தார் என்றால் வருடம் தெரியவில்லை. மாரியம்மாளின் இறப்பு சான்று தாக்கல் செய்துள்ளேன். மாரியம்மாளுக்கு வாரிசு உள்ளாரா என்றால் அவருக்கு வாரிசு இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யானது என்றாலும் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)